# வேதநாயக சாஸ்தியார் படைப்புகளில் பக்தி நெறிகள் (ஞானஅந்தாதி,ஜெபமாலை)

**டே. ரமணி,** M.A., Ph.D., NET.
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பிஷப் கால்டுவெல் கல்லூரி, மறவன்மடம்

***முன்னுரை***

*பக்திப் பாடல்களைப் பாடிய அடியவர்கள் எல்லோரும் இறையருளைப் பெற்றவர்கள் இறையோடு கலந்தவர்கள் எனலாம். அவர்கள் தங்கள் பக்தி அனுபவத்தைக் காதல் அனுபவமாகப் பாடியிருக்கிறார்கள் பக்தியைக் காதலாக உருவகித்திருக்கிறார்கள். இறைவனோடு இரண்டறக கலந்த நிலையில் அவர்களுடைய பக்தி அனுபவம் காதல் அனுபவம் வெளிப்படுகிறது. இறை அருளைப் பெறாத நிலையில் இறையருளைப் பெறுவதற்காக இவர்கள் பாடல்கள் பாடியுள்ளனர். இறுதிநிலையில் இறையருள் கிட்டியதாகப் பாடியிருக்கின்றனர். அவ்வாறு பாடிய கிறிஸ்தவ இலக்கியம் வேதநாயக சாஸ்திரியாரின் படைப்பாளியான ஞானஅந்தாதி, ஜெபமாலை நூல்களில் உள்ள நாயக நாயகி பாவனை, பிழை நினைந்திரங்கல், ஏகதெய்வவழிபாடு, கூட்டு வழிபாடு, சரணாகதி நெறி பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6493

**நாயக-நாயகி பாவம்**

தமிழ் இலக்கிய அகத்திணை மரபில் தலைவன்-தலைவி பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படும். அன்புணர்வின் உச்ச நிலையில் இருக்கும் பக்தன் இறைவனை காதலனாகவும் தன்னை காதலியாகவும் வைத்துப் பாடுவது நாயக-நாயகி பாவம் எனப்படும். கிறித்துவ சமய மரபிலும் இறைவனை மனவாளனாகவும் ஆன்மாக்களை மண வாட்டிகளாகவும் குறித்துப் பாடியிருப்பதற்குச் சான்றுகள் உள்ளன. மேலும் கிறிஸ்துவைத் தலைவனாகவும் அவரை அடையத் துடிக்கும் திருச்சபையைத் தலைவியாகவும் உருவகித்துப் பாடும் வழக்கமும் உண்டு. சாஸ்திரியாகும் இறைவனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவித்து இலக்கியங்கள் படைத்துள்ளார். சாஸ்திரியாரின் ஞான அந்தாதி இறைவன் மீது கொண்ட காதலை விளக்குவதாக நாயக,நாயகி பாவத்தில் அமைந்துள்ளது. ஞான அந்தாதியின் காப்புச் செய்யுளில்

> **“ஞான மணவாளனின் மேல் நாயகி கொண்டாள் காதல்**
> **வான மணவாளன் மகிழவே-யான தனை**
> **உன்னதக்கீ தத்துரையாயாய் ஓதினன் நூறின் கவிக்குக்**
> **கன்னி மான் பாதமலர் காப்பு”[1]**

என்று பாடியுள்ளார். திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டு பகுதியில் உள்ள உன்னதப்பாட்டு என்னும் சாலமோனின் பாடல்களை ஞான அந்தாதியில் நாயக, நாயகி பாவனை சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது. தலைவனைக் காணாமல் ஏங்கும் தலைவியின் துன்ப நிலையினை

**"அன்று தொன்று இன்று முதலளவும் அவராவலினஸ்**
**ஒன்றும் கருதலையே ஊணும் இல்லை உறக்கமில்லை**
**என்றும் என்மேல் பகைகொண்டனன் நானினிஎன் செய்குவேன்**
**நன்று சொல்வாரிலை சொல்வோர்க்கு நானொரு நங்கையரே".[2]**

என்று பாடுகிறார். துலைவி தலைவனின் பிரிவுத் துயரினால் உணவின்றி, உறக்கமின்றி, உதவியின்றி, சிந்தனையின்றி செய்பதறியாது தவிக்கிறார்.

**"நானினி யென் செய்குவேன்"[3]**

என்று கூறுமிடத்தில் தலைவின் துயரம் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளது.

**பிழைநினைந்திரங்கல்**

பக்தி வாழ்வில் பாவ அறிக்கை செய்து அதற்கு பரிகாரம் தேடுவது சமயச் சான்றோர்களின் நிலையாகும். இறையடியார்கள் இறைவனை அடைய முயலும் போது தமது பாவங்களைக் குறித்த உணர்வினைப் பெறுவர். அவற்றைத் தாம் பாடும் பக்திப்பனுவல்களில் புலப்படுத்துவர். தமது பழைய வாழ்க்கையைக் குறித்து சிலர் கண்ணீர் வடித்து புலம்பி தம் உணர்வினை வெளிப்படுத்துவர். ஒளிவடிவான இறைவனுடன் கலந்து நிற்கும் பக்தர்கள் இருள் வடிவான தங்கள் குறைகளை உணர்ந்து மன்னிப்படைத்து இறையருளைப் பெறுகின்றனர்.

சாஸ்திரியார் ஜெபமாலையில் பாவ சங்கீர்த்தனம், பாவசங்கீர்த்தனகலம் என்னும் இரு பதிகங்களை பிழைநினைந்திரங்கும் பகுதிகளாகப் பாடியுள்ளார். இப்பகுதிகளில் சாஸ்திரியார் தான் ஒரு பாவி என்று குறிப்பிடுகிறார்.

**"மண்ணிலே பவத்தினால் உதித்து வந்த பாவியேன்"**
**"அங்கமுங்கி மங்கியே அலைக்கழித்த பாவியேன்".[4]**

என்று கூறுவதன் மூலம் தான் மண்ணிலே பாவத்தினால் பிறந்த பாவி என்றும் உடல் நீரில் மூழ்கி அலைக்கழிந்த பாவி என்றும் குறிப்பிடுகிறார்.

**"பொன்னை நாடும் ஆசையும் பொருளை நாடும் ஆசையும்**
**பூமிதேடும் ஆசையும் சீமை தேடும் ஆசையும்**
**கன்னிமாதர் ஆசையும் காமலீலை ஆசையும்**
**கட்புலன்கள் ஐந்ததின் கணக்கில்லாத ஆசையும்**
**மின்னும் ஆடுமாடு வீடு வாசல் ஆசையும்**
**மிக்க தந்தை தாயர் ஆசைமக்கள் பெந்தின் ஆசையும்**
**என்னை எண்ணும் ஆசையும் இகழ்ந்து யான் பிழைக்கவென்று**
**ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாதா சுவாமியே"[5]**

இப்பாடலில் சாஸ்திரியார் பதினொரு ஆசைகளைக் கூறி இவ்வாசைகளை வெறுத்து நான் பிழைக்க அருள் செய்ய வேண்டுமென இறைவனை வேண்டுகிறார்.

**ஏக தெய்வ வழிபாடு**

இறைவன் பெயர் குலம் இல்லாதவன். அப்படிப்பட்ட இறைவனுக்கு ஆயிரம் பெயர்கள் சொல்லி நாம் அழைக்க வேண்டும் என்றார் மாணிக்கவாசகர். திருமூலர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று பாடுகிறார். ஆத்திசூடியிலும் பரம்பொருள் ஒன்றே என்ற நிலை வலியுறுத்தப்படுகிறது. சாஸ்திரியாரும் இயேசுகிறிஸ்து ஒருவரையே தெய்வமாகக் கூறுகிறார்.

**"எண்ணுமாகினை இறையுமாகினை**
**ஏகமாகினை ஆகமாகினை"[6]**
**"ஏக தாதாவே புறாவே சொரூப**
**என் நாவின் நாவே மன்னாவே".[7]**
**"சாகாவோர் ஏகா"[8]**

எனவரும் பாடலடிகளில் அமைந்துள்ள ஏகா என்ற சொற்கள் இயேசுகிறிஸ்து

ஒருவரே தெய்வம் என்ற ஏக தெய்வ வழிபாட்டை வரியுறுத்துகின்றன. ஞான அந்தாதியின் இந்தப் பிறவியில் மட்டுமல்ல இனி எந்தப் பிறவியிலும் நீயே எனக்குத் துணை என்று இயேசுகிறிஸ்துவை வழிபடுகிறார் சாஸ்திரியார்.

**"வேதாவுனை யின்றிப்பின் னெனக்குத்து ணை வேறுமுண்டோ".9**

## கூட்டு வழிபாடு

வழிபாடு என்பது இறைவனோடு ஒன்றிக் கலக்கும் செயலாகும். முனதை இறைவனிடம் ஒரு முகப்படுத்தி பேரானந்தம் அடைய வைப்பது வழிபாடாகும். கோயில்களில் சென்று அனைவரும் இணைந்து வழிபாடு செய்வதை கூட்டு வழிபாடு என்பர். இக்கூட்டு வழிபாடானது எல்லா சமயத்திலும் காணப்படும் ஒன்றாகும். சாஸ்திரியாகும்.

**"கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன் எங்கள் குருவேசுநாதர் பதம் கும்புடுகிறேன்".[10]**

என்கிறார். இதில் "கும்பிடுகிறேன் நான்" என்று தம்மை ஒருமையில் தொடங்கி "எங்கள் குருவேசுதாதர்" என்று பன்மையில் கூறுகிறார். ஏனவே இது கூட்டு வழிபாடுகளில் பாடப்பட வேண்டிய பாடல்கள் என்பது தெளிவாகிறது. இன்றும் தேவாலயங்களில் இப்பாடல்கள் கூட்டு வழிபாடுகளில் பாடப்பட்டு வருகின்றன. பரிசுத்த வேதாகமத்தின் மத்தேடி பகுதியில் இயேசு கிறிஸ்து தமது சீடர்களுக்கு விண்ணப்பம் செய்ய கற்றுக் கொடுத்த போது

**"பரமண்டலத்தில் இருக்கிற எங்கள் பிதாவே"[11]**

என அழைத்து ஒரு கூட்டு விண்ணப்பத்தையே கற்றுக் கொடுத்தர். இதை பகுதியில் மற்றொரு இடத்தில் வரும்

**"இரண்டு பேரானது மூன்று பேரானது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்".[12]**

என்ற இறைவாக்கும் கூட்டு வழிபாடு செய்வதையே வலியுறுத்துகிறது.

## முடிவுரை

இறையடியார்கள் பக்திப் பாடல்களைப் பாடி இறையருளைப் பெற்றிருக்கின்றனர். இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவித்து இறைஅடியார்கள் பாடியுள்ளனர்.

பக்திவாழ்வில் பாவ அறிக்கை செய்து பரிகாரம் தேடுவது சமயச் சான்றோர்களின் நிலையாகக் காணப்படுகிறது.

இறைவனை ஆயிரம் பெயர்கள் கூறி அனைத்தாலும் ஒரே தெய்வ வழிபாட்டு முறையே வலியுறுத்தப்படுகிறது.

முனைத இறைவனிடம் ஒருமுகப்படுத்தி பேரானந்தம் அடைய வைப்பது கூட்டு வழிபாடாகும்.

## அடிக்குறிப்புகள்

1. தஞ்சை வேதநாயக சாஸ்திரி யார்., (ஞான அந்தாதி, காப்புச் செய்யுள்
2. மேலது பா.எ.16
3. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ஜெபமாலை பா.1:14:13.
4. மேலது பா.1:14:4
5. மேலது பா.1:14:5
6. மேலது பா.1:13:10
7. மேலது பா.1:6:3
8. மேலது பா.1:4:10
9. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், ஞான அந்தாதி,பா.96
10. தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், தேவதோத்திரம் பா.1:2:1
11. பரிசுத்த வேதாகமம், மத்தேயு, ஆதி:6,வச:9
12. மேலது 18:20.

## துணைநூற்பட்டியல்


1. சவரிமுத்து சி.வி., - ஜெபமாலை மூலமும் விரிவுரையும் திறனாய்வும்,
2. The Christain Literature Society, Post Box 501, Park Town, Madras-600 003. முதல்பதிப்பு 1987.
3. நோவா ஞானாதிக்க - வேதநாயக சாஸ்திரியார், சாஸ்திரியார், வி., தூதன் அச்சகம், நாகர் கோவில், 1974.
4. சௌந்தரபாண்டியன்.எஸ்., - தமிழில் கீர்த்தனை இலக்கியம், ஸ்டார் பிரசுரம்,
5. த.பெ.எண்-423. 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.